Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# An Estimation of Parimelazhagar's *Thirukkural* Urai and M.Varatharasanar's Thiruvalluvar or *Vazhkkai Vilakkam* Urainoolum

**I. Muniasamy**, Assistant Professor, Department of Tamil,
Caussanel College of Arts and Science, Ramanathapuram - 623523, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-3640-857X
**DOI: 10.5281/zenodo.6622465**

## Abstract

*This article compares Parimezhagar's Thirukkural text to M. Varatharasana's Thiruvalluvar or Vazhkkai Vilakkam of Thirukkural and explains the differences in the textual structure of the two literary stalwarts. It can be seen that most of the text structure of the two is differentiated in the mode of the category of virtue, object and pleasure. Similarly, the system of physiognomy is not found in the text of the Mu.Va. has been seen in the Parimelazhagar text. It is possible to see the difference between the two in system of projecting the virtues of life in their treatises. Thus, from Parimelazhagar to Mu.Va., the reason for the variance is they did not write his book as a mere text, but as a study of the thread of human life blended with culture and heritage. Apart from these, in some parts of the texts, it is permissible to view the text with the Parimelazhagar religious affiliation. It is also possible to see the text in the general sense of non-religion*. Hence, this article decodes the similarity of the selected texts.

**Keywords:** *Thirukkural*, Parimelazhagar, M.Varatharasan, Text, Comparison, Evolution.

**References**

[1] Chithambarampillai V.U. (Pathi.) *Tholkappiyam Porulathikaram (Kalaviyal, Karpiyal, Poruliyal).* Vavillai Ramaswami Sasthrulu & Sons, Chennai, 1933.
[2] Parimelazhagar (Urai). *Thirukkural.* Saratha publication, Chennai - 14, 2009.
[3] Varatharasan, M. *Thiruvalluvar or Vazhkkai Vilakkam.* Pari Nilaiyam, Chennai, 1952,

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# திருக்குறள் பரிமேலழகர் உரையும் மு.வ.வின் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் உரை நூலும் - ஓர் மதிப்பீடு

**இ. முனியசாமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
இராமநாதபுரம் – 623523, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-3640-857X**
**DOI: 10.5281/zenodo.6622465**

**ஆய்வுச் சுருக்கம்**

*பரிமேலழகரின் திருக்குறள் உரையுடன் மு.வரதராசனாரின் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் எனும் உரை நூலினை ஒப்பிட்டு இவ்விருவரது நூல் (உரை) அமைப்பிலும் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இருவரது உரை அமைப்பிலும் பெரும்பகுப்பான அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற பகுப்பின் நிரல் வைப்பு முறையில் மாறுபட்டு அமைக்கப்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. அதேபோல் இயல்வைப்பு முறை பரிமேலழகர் உரையில் இடம்பெற மு.வ.வின் உரை நூலில் அவ்வமைப்பு காணப்பெறவில்லை. அதிகார வைப்பு முறையிலும் இருவரும் பல்வேறு இடங்களில் மாறுபடும் தன்மையினையும் காணமுடிகிறது. இவ்வாறு பரிமேலழகரிலிருந்து மு.வ. மாறுபடுகின்றமைக்குக் காரணம் மு.வ. தனது நூலினை வெறும் உரையாக மட்டும் எழுதாது திருக்குறளை மனித வாழ்வியலின் நெறியாக ஆராய்தமையே எனலாம். இவையன்றி குறட்பாக்களினது உரைகளின் சில இடங்களில் பரிமேலழகர் சமயச் சார்பு கொண்டு உரை காண மு.வ. எம்மதமும் சாராது பொதுமை நோக்கில் உரை கண்டுள்ளமையையும் காணமுடிகிறது.*

**திறவுச்சொற்கள்:** திருக்குறள், பரிமேலழகர், மு.வரதராசனார், நூல், ஒப்பீடு, மதிப்பீடு

**முன்னுரை**

தமிழ் மொழியில் பண்டைக் காலந்தொட்டு பல்வேறு அறநூல்கள் தோன்றியுள்ளன. அவ்வற நூல்களுள் பழமையானதும், தமிழர்களாலும் உலகத்தோராலும் சிறந்த நூலாகவும் போற்றப்படுவது உலகப் பொதுமறை எனும் திருக்குறள். இத்திருக்குறளுக்கு இதுகாறும் 240-கும் மேற்பட்ட உரைகள் தோன்றியுள்ளன. இன்றும் உரைகள் தோன்றியவண்ணம் உள்ளன. அவ்வுரைகளுள் சிறந்த உரையாக ஆராய்ச்சியாளர்களால் கருதப்பெறுவது பரிமேலழகரின் உரையாகும். இருபதாம் நூற்றாண்டில் மு.வரதரானார் அவர்கள் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், திருக்குறள் தெளிவுரை என்ற நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் 1948-ஆம் ஆண்டும் திருக்குறள் தெளிவுரை 1949-ஆம் ஆண்டும் எழுதப்பெற்றுள்ளது. இவரது திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்ற நூலினை பரிமேலழகரின் திருக்குறள் உரையோடு ஒப்பிட்டு ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

**பரிமேலழகர்**

பரிமேலழகர் திருக்குறள், பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகிய மூன்று நூல்களுக்கு உரை எழுதியுள்ளமையைக் காண முடிகிறது. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் காலத்தால்

பிற்பட்டவர் பரிமேலழகர். ஏனெனில் நன்னூல் ஆசிரியரின் கருத்துக்களும் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையரின் உரைக் கருத்துக்களும் இவரது உரையில் காணப்பெறுகின்றன. இவையன்றி கி.பி.14-ஆம் நூற்றாண்டினர் எனக் கருதப்பெறும் நச்சினார்க்கினியர் தனது திருமுருகாற்றுப்படை உரையில் பரிமேலழகரின் உரையை மேற்கோள் காட்டி மறுத்துரைத்துள்ளார். ஆகையால் நச்சினார்க்கினியர் காலத்திற்கு முற்பட்டவர் பரிமேலழகர் என்பது தெளிவு. நச்சினார்க்கினியர் காலத்திற்கு முற்பட்டவர் என்பதாலும் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனக் கருதப்பெறும் சேனாசரையர் காலத்திற்குப் பிற்பட்டவர் எனக் கருதப்பெறுவதாலும் பரிமேலழகர் கி.பி.13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியல் வாழ்நதவர் எனக் கருதலாம்.

**மு.வரதராசனார்**

மு.வரதராசன் 25.04.1912 அன்று திருப்பத்தூரில் முனுசாமி-அம்மாக்கண்ணு தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். இயற்பெயர்(பெற்றோர் இட்டபெயர்) திருவேங்கடம். எனினும் வரதராசன் என அழைக்கப்பட்ட தாத்தாவின் பெயரே இவருக்கு நிலைத்துவிட்டது. இன்று தமிழுலகில் மு.வ. என அனைவராலும் செல்லமாக அழைக்கப்பெறுகிறார். இவர் தனது பள்ளிக் கல்வியைத் திருப்பத்தூரில் முடித்துள்ளார். திருப்பத்தூர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகவும் பின் பச்சையப்பன் கல்லூரியிலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராகவும் பணியாற்றியவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் “சங்க இலக்கியததில் இயற்கை” எனும் தலைப்பில் முனைவர்பட்ட ஆராய்ச்சி மேற்கொண்டு அங்கு தமிழில் முதன் முதலாக முனைவர் பட்டம் பெற்றவர். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 1971 முதல் 1974 வரை செயல்பட்டவர். சிறுவர் இலக்கியம், சிறுகதை, புதினம், வரலாறு, மொழி, ஆராய்ச்சி, உரை எனப் பலவற்றிலும் 80-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அகல் விளக்கு என்ற நூலிற்குச் சாகித்ய அகாதெமி விருது பெற்றவர். இவையன்றி பல்வேறு விருதுகளும் பரிசுகளும் பெற்றுள்ளார்.

**பெரும்பகுப்பு வைப்புமுறை**

பரிமேலழகர் திருக்குறளின் பெரும்பகுப்பினை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முறையில் அமைத்துள்ளார். ஆனால் மு.வ. தனது திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்ற நூலில் காமத்துப்பால், பொருட்பால், அறத்துப்பால் என்ற முறையில் அமைத்துள்ளார். இவ்வமைப்புமுறை பெரும்பாலான உரையாசிரியர்களிடம் காணப்பெறவில்லை. அறம், பொருள், இன்பம் என்ற முறையினைத் தொல்காப்பியமும் காப்பிய இலக்கியங்களும் அறநூல்களும் ஆழ்வார்களும் நாயனமார்களும் குறிப்பிட இவர் மட்டும் மாறாக இவ்வாறு குறிப்பிட்டிருப்பது நமக்கு ஐயத்தினை ஏற்படுத்துகிறது. எனினும் இன்பம், பொருள், அறம் எனும் வைப்புமுறையினைத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருப்பதையும் காணமுடிகிறது. அவை,

**இன்பமும் பொருளு மறனும் என்றாங்**
**கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்**
**காமக் கூட்டங் காணுங் காலை**
**மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்**
**டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே (தொல்.களவு.1)**

இந்நூற்பாவிற்கு உரை வரைந்த இளம்பூரணர் இவ்வைப்பு முறைக்கான காரணத்தினை, “அறனும் பொருளும் இன்பமும் என்னாது, இன்பமும் பொருளும் அறனும் என்றது என்னை எனின், பலவகை

உயிர்கட்கும் வரும் இன்பம் இருவகைப்படும். போக நுகர்தல் மனையறத்தார்க்கெய்துவது. அவரெய்தும் இன்பமும் அவ்வின்பத்திற்குக் காரணமாகிய பொருளும் அப்பொருட்குக் காரணமாகிய அறனும் எனக் காரிய காரணம் நோக்கி வைத்தார் என்க" (1933:41...) எனக் குறிப்பிடுகின்றார். இதன் அடிப்படையிலேயே மு.வ.வின் பெரும்பகுப்பு வைப்புமுறையானது அமைந்துள்ளது என எண்ணத் தோன்றுகிறது. மு.வ.வும் இன்பம், பொருள், அறம் என்ற வைப்புமுறைக்கான காரணத்தைக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார், **"காதலும் பொருளும் வாழ்க்கைப் படிகள், அறமே வாழ்க்கையில் உயர்நிலை என்று விளக்கும் நோக்கத்தால் காமத்துப்பால், பொருட்பால், அறத்துப்பால் என்னும் முறையில் இந்நூல் எழுதப்பெற்றுள்ளது" (முன்னுரை.23).** இவ்வாறு தனது முன்னுரையில் மு.வ. குறிப்பிட்டுள்ளமையாலும் தனது நூலைத் திருக்குறள் உரை எனச் சுட்டாது வாழ்க்கை விளக்கம் எனப் பெயரிட்டமையாலும் மனித வாழ்வின் முதலில் காதலாகிய இன்பமும் அவ்வின்ப நுகர்விற்குப் பின் பொருள் தேவை என்பதாலும் இவர் இவ்வைப்பு முறையினை அமைத்துள்ளார் என்பது தெளிவாகிறது. வாழ்க்கை விளக்கம் என அமைத்து திருக்குறளுக்கு இவர் உரை எழுதியமையால் பெரும்பகுப்பினை இன்பம், பொருள், அறம் என்ற முறையில் அமைத்தமை பொருத்தமுடையதாகவே உள்ளது.

**இயல் வைப்புமுறை**

இயல் பகுப்பு எனும் முறையானது பரிமேலழகர் முதலான பெரும்பாலன உரையாசிரியர்களின் உரைகளில் காணப்பெறுகிறது. பரிமேலழகர் தனது உரையில் இயலமைப்பைத் திருவள்ளுவர் அமைத்த முறைப்படி அறத்துப்பாலில் பாயிரம், இல்லறவியல், துறவவியல், ஊழ் இயல் எனவும் பொருட்பாலில் அரசியல், அங்கவியல், குடியியல் எனவும் இன்பத்துபாலில் களவியல், கற்பியல் எனவும் அமைத்துள்ளார். எனினும் மு.வ.வின் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் எனும் இந்நூலில் இயல் பகுப்பு முறை காணப்பெறவில்லை. ஆனால் மு.வ.வின் 'திருக்குறள் தெளிவுரை' எனும் நூலில் இவ்வியல் வைப்பு முறை காணப்பெறுகிறது. இவரின் வாழ்க்கை விளக்கம் எனும் நூலில் இம்முறை இல்லாதது பெரும் ஐயத்தினை ஏற்படுத்துவதாகவே உள்ளது. இயல் பகுப்பு அமைக்காமைக்கான காரணத்தையும் தனது நூலில் அவர் சுட்டவில்லை.

**அதிகார வைப்புமுறை**

அதிகார வைப்பு முறையில் பரிமேலழகர் தனது உரை நூலில் வள்ளுவனார் செய்த நூல் வழியே அதிகார வைப்பு முறையினை அமைத்துள்ளார். ஒரு அதிகாரத்தை அடுத்து மற்றொரு அதிகாரம் இடம்பெற்றமைக்கான காரணத்தையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளமை சிறப்பாக இடம்பெற்றுள்ளது. பரிமேலழகரிலிருந்து மு.வ. அதிகார வைப்பு முறையில் வேறுபடுகின்றமையைக் காணமுடிகிறது. இவ்வேறுபாட்டினை இரு தன்மைகளில் குறிப்பிடலாம். அவை, "அதிகாரம் முழுமையும் காணப்பெறாமை". "ஒரு அதிகாரத்தின் தலைப்பில்பிற அதிகாரத்தின் குறட்பாட்களையும் சேர்த்துக் கூறல்". மு.வ. தனது உரையில் சில அதிகாரங்களுக்கு விளக்கம் எழுதியும் சில அதிகாரங்களுக்கு விளக்கம் எழுதாமலும் விட்டுச்செல்லும் அமைப்பும் காணப்பெறுகிறது. சில அதிகாரங்களுக்கான விளக்கம் விரிவான விளக்கவுரையாக உள்ளது. அதிகாரங்களுக்கு விளக்கம் அமைந்த அதிகாரங்களாக கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, இல்வாழ்க்கை போன்றனவற்றைக் குறிப்பிடலாம். அதிகார விளக்கம் இடம்பெறாதவைகளாக நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், வாழ்க்கைத் துணைநலம் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

**1. அதிகாரம் முழுமையும் காணப்படாதவை**

அதிகாரம் முழுமையும் காணப்பெறாதவையாகப் பொருட்பாலில் ‘அரண்’ (75) எனும் அதிகாரம் மட்டுமே உள்ளது. இதற்குக் காரணம் நூல் முழுமைக்கும் உரை எழுதவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான குறட்பாக்கள் அதன் விளக்கங்களை மட்டுமே எழுதியுள்ளார். இவ்வதிகாரம் இடம்பெறாமைக்கு முன்னுரையில் அவர் குறிப்பிட்டுள்ள பகுதி பொருத்தமுடையதாக அமைகிறது. அப்பகுதி வருமாறு, “**திருவள்ளுவர் வாழ்க்கையை எவ்வாறு ஆராய்ந்துள்ளார், அவர் கண்டு விளக்கிய உண்மைகள் யாவை, அந்த விளக்கங்கள் இன்றைய வாழ்க்கைக்கு எவ்வளவில் பயன்படுவன என்னும் பகுதிகளை இங்கு ஒருவாறு எழுதப்பட்டுள்ளன” (முன்னுரை. 22)**. இவை தவிர்த்து காமத்துப்பாலில் அதிகார வைப்பு முறை எனும் பகுதியே காணப்பெறவில்லை. இவ்வாறு அமையாமைக்கான காரணம் மு.வ. தனது நூலினை வாழ்க்கை விளக்கம் ஒரு ஆராய்ச்சி நூலாக அமைத்துக் கொண்டதே எனலாம்.

**2. ஒரு அதிகாரத்தின் தலைப்பில்; பிற அதிகாரத்தின் குறட்பாட்களையும் சேர்த்துக் கூறல்**

பரிமேலழகர் 133 அதிகாரங்களையும் அவற்றின் குறட்பாக்களையும் தனித் தனியாகவே குறிப்படுகிறார். ஆனால் மு.வ. சில அதிகாரங்களைத்; தனியே கூறாமல் பிற அதிகாரங்களுடன் சேர்த்துக் குறிப்பிடுகிறார். அவ்வாறு வேற்று அதிகாரங்களுடன் சேர்த்து எழுதப்பெற்ற அதிகாரங்களாகக் கல்லாமை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, மடியின்மை, ஆள்வினை உடைமை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், அவை அஞ்சாமை, படைச்செருக்கு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு, பகைத்திறம் தெரிதல், உட்பகை, இரவச்சம் ஆகியனவைகள் காணப்பெறுகின்றன. இவ்வாறு ஒன்றுடன் பிறவற்றைச் சேர்த்துக் கூறுவதற்கு அவ்வதிகாரத்தோடு தொடர்புடையது என்பதே காரணமாக அமைகிறது என எண்ணத் தோன்றுகிறது. சான்றாக, ‘நட்பு’, எனும் தலைப்பின் கீழ் நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு ஆகிய பகுதிகளைக் குறிப்பிடலாம்.

**உரை வேறுபாடு**

கட்டுரையின் அளவு கருதி உரை வேறுபாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும் பகுதியாக பாயிரவியல் மட்டும் அமைகிறது. பாயிரவியலில் உள்ள நான்கு அதிகாரங்களுள் 9, 10, 12, 22, 25, 28, 38 ஆகிய ஏழு குறட்பாக்களும் அதன் உரையும் மு.வ.வின் நூலில் காணப்பெறவில்லை. இதற்குக்; காரணம் முன்பு கூறிய வாழ்க்கைக்குத் தேவையான பகுதிகள் மட்டுமே நூலில் இடம்பெறுகிறது என்பதே ஆகும். இதே போல் எல்லா அதிகாரங்களிலும் சில குறட்பாக்கள் காணப்பெறவில்லை. நூல் முழுவதும் ஒரு அதிகாரத்தில் கூட 10 குறட்பாக்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எஞ்சிய 33 குறட்பாக்களில் 1, 2, 20, 23, 31, 37, 39, 40, ஆகிய எட்டு குறட்பாக்கள்; உரை வேறுபாடு உடையனவாகக் காணப்பெறுகின்றன. சான்றுக்குச் சில வருமாறு,

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு (குறள். 1)**

என்ற குறளுக்கு உரை வரைந்த பரிமேலழகர் ‘ஆதி பகவன்’ என்பதற்கு அவர் வைதீகச் சமயச் சார்பு கொண்டு சிவன், திருமால், பிரமன் என்ற கடவுளர்களைக் குறிப்பிடுகிறார். ஆனால் மு.வ. எந்தவொரு மதக் கடவுளையும் குறிப்பிடாமல் பொதுமை நிலையில் கடவுள் என்றே குறிப்பிட்டு உரை எழுதிச் செல்கிறார். இவை மு.வ.வின் சமயச் சார்பின்மையைக் காட்டுகிறது எனலாம்.

**சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு (குறள். 31)**

இக்குறட்பாவிற்கு உரை வரைந்த பரிமேலழகர் ‘சிறப்பு’ என்பதற்கு ‘வீடுபேறு’ எனவும் ‘செல்வம்’ என்ற சொல்லிற்கு ‘துறக்கம்’ எனவும் பொருள் கண்டுள்ளார். ஆனால் மு.வ. இக்குறட்பாவிற்கு “அறமே வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பைத் தரும் செல்வத்தையும் தரும், ஆகையால் அறத்தைவிட உயிர்க்கு ஆக்கமாவது வேறு எது?” (1952: 311) என நேரடிப் பொருளையே எழுதியுள்ளார். இவை போல் மேற்குறிப்பிட்ட பிற குறட்பாக்களிலும் இருவரும் சிலவிடங்களில் வேறுபடுவதைக் காணமுடிகிறது.

**தொகுப்புரை**

பரிமேலழகரின் திருக்குறள் உரையிலிருந்து மு.வ.வின் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் எனும் நூலின் உரையானது வேறுபடுமாற்றைக் கீழ்வருமாறு தொகுத்துக் கூறலாம். திருக்குறளின் பெரும்பகுப்பு வைப்புமுறையில் பரிமேலழகர் அறம், பொருள், இன்பம் என அமைக்க மு.வ. இன்பம், பொருள், அறம் என அமைத்துள்ளமையைக் காணமுடிகிறது. இதற்குக் காரணம் மு.வ. திருக்குறளுக்கு நேரடியாக உரை கூறாது வாழ்க்கை விளக்கம் என எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி நோக்கில் நூலை ஆராய்ததே ஆகும். பரிமேலழகரின் திருக்குறள் உரை நூலில் இயல் வைப்புமுறை என்ற ஒன்று காணப்பெறுகிறது. ஆனால் மு.வ.வின் இந்நூலில் இயல் வைப்புமுறை என்ற ஒன்று இடம்பெறவில்லை. அதிகார வைப்புமுறையில் பரிமேலழகர் திருவள்ளுவரின் அதிகார வைப்புமுறையினை அவ்வாறே அமைத்து அதற்குக் காரண காரியத்தையும் அதிகார விளக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மு.வ. தனது நூலில் சில அதிகாரங்களுக்கு விளக்கம் எழுதியும் சில அதிகாரங்களுக்கு விளக்கம் எழுதாமலும் விட்டுச்செல்வதைக் காணமுடிகிறது. இவையன்றி சில அதிகாரங்கள் முழுமையும் காணப்படாமையும் சில அதிகாரங்களின் குறட்பாக்கள் வேறு அதிகாரங்களின் தலைப்பில் இடம் பெற்றுள்ளமையையும் காணமுடிகிறது. இருவரும் உரை வரையும் போது சில இடங்களில் வேறுபடுகின்றனர். எனினும் இருவரின் உரைப் பகுதிகளும் பொருத்தமுடையதாகவே அமைகிறது.

**துணை நின்றவை**

**[1]** சிதம்பரம்பிள்ளை வ.உ.(பதி.), *தொல்காப்பியம் பொருளதிகாரம் (களவியல், கற்பியல், பொருளியல்),* வாவிள்ளை இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஷன்ஸ், சென்னை. 1933

[2] பரிமேலழகர் (உரை), *திருக்குறள்,* சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை-14, 2009.

[3] வரதராசன் மு., *திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்.* பாரி நிலையம், சென்னை, 1952.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.